II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 196 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 15.10.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Parimala | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியே ஆஜராகி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறது.</u>

வழக்கு சொத்தை 1968ம் ஆண்டு என் தந்தை என் தாயார் பெயரில் வாங்கினார். அது என் தந்தையின் சுய வருமானத்தில் இருந்து கிரையம் பெறப்பட்டது. என் தாயாருக்கு வழக்கு சொத்துகள் தவிற வேறு சொத்துகள் இருந்ததா என்றால் வேறு சொத்துகள் இருந்தன. என் தாயார் பெயரில் இருந்ததா, என் தந்தை பெயரில் இருந்ததா என்று ஞாபகம் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். பத்திர பதிவு அலுவலகத்திற்கு என் மனைவி வரவில்லை என்றால் எனக்கு தெரியாது. என் மகளின் பிரசவத்திற்காக ஊருக்கு போய் இருந்தேன். பிரதிவாதி குடும்பத்தை என் தாயாரை பார்த்துக்கொள்ள சொல்லியிருந்தேன். திரும்பி வந்த போது சொத்து பிரதிவாதியின் பெயரில் மாறியிருந்தது. சொத்துக்காக என் தாயாரை நானும் என் கணவரும் தாக்கினோம் என்றால் சரியல்ல. என் கணவருக்கு பிரதிவாதியாகிய நான் தான் ரூ.3 லட்சம் வாங்கி கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை.

பிரதிவாதி தான் எடுத்துக்கொண்டார். எனக்கு எத்தனை குழந்தைகள் என்று பிரதிவாதியிடம் சொல்ல விரும்பவில்லை. நான் புகார் கொடுத்த நேரம் நீண்ட காலம் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. என் தாயாரை 2020ம் ஆண்டு போலிசார் விசாரணை செய்தனர். 2025ல் நான் போலிசாரிடம் புதிய புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் போய் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டேன். பிரதிவாதியின் பெயரில் விடுதலை பத்திரம் இருப்பது பற்றி 2020 ஜனவரி மாதம் தெரியும். அந்த விடுதலை பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்ட நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனது தாயார் பத்திரம் பதிவு செய்யும் போது நல்ல உடல் நலம் மற்றும் மன நிலையில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. 09.07.2020 அன்று என் தாயாரை பத்து பேருடன் வந்து கட்டாயப்படுத்தி நான் அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. என் அம்மாவை பராமரிப்பதற்காகவும் பாதுகாப்பிற்காகவும் நான் அழைத்து சென்றேன். பிரதிவாதி 100க்கு போன் செய்து போலிசார் வருவதற்குள் நான் அழைத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என் அம்மாவை அழைத்துக்கொண்டு போனேன். பிரதிவாதி உறவினர் கிடையாது. வாடகைதார் தான்.

(இந்நிலையில் பிரதவாதியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.